**பிப்ரவரி – 27**

# TNPSC துளிகள்

- சென்னை உயர்நீதிமன்றமானது அனைத்து பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களும் ஒருவேளை அவர்களது தேர்தல் சட்ட விரோதமானது என்று அறிவிக்கப்பட்டால் அவர்கள் தங்கள் ஊதியம், மற்ற படிகள் ஆகியவற்றை அபராதத்துடன் திருப்பிச் செலுத்த வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது.
    - இந்த தகுதி நீக்க உத்தரவு அவர்களது பதவிக் காலம் முடிந்த பின்போ அல்லது முடிவடைவதற்கோ முன்போ பொருந்தும்.
- நீதிபதி A. ஆறுமுகசாமி ஆணையத்தின் பதவிக் காலத்தை தமிழக அரசு அடுத்த நான்கு மாதங்களுக்கு நீட்டித்திருக்கின்றது.
    - 2017 ஆம் ஆண்டு செப்டம்பர் 25-ம் தேதி முன்னாள் முதல்வர் J. ஜெயலலிதாவின் மரணம் தொடர்பான சூழ்நிலைகள் பற்றி ஆராய இந்த ஒரு நபர் ஆணையத்தை மாநில அரசு நியமித்தது.
- தமிழ்நாடு அரசு 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நாட்டின் உயர் வம்ச மற்றும் கலப்பின காளைகளுக்கான புதிய உறை விந்தணு சேமிப்பு மையத்தை சேலத்தின் ஒருங்கிணைந்த கால்நடைப் பூங்காவில் ஏற்படுத்தப்படும் என்று அறிவித்திருக்கின்றது.
- இந்திய விமானப்படை, பாகிஸ்தானின் கைபர் பக்தூன்க்வா மாகாணத்தில் பாலகோட் எனும் பகுதியில் ஜெய்ஷ்-இ-முகமது எனும் பயங்கரவாத அமைப்பின் மிகப்பெரிய பயிற்சிக் குழுவின் மீது விமானத் தாக்குதல்களை நடத்தியது. இதற்காக மிராஜ் 2000 வகை போர் விமானங்கள் பயன்படுத்தப்பட்டன.
- இந்திய ரிசர்வ் வங்கி, தலைமை செயல் அதிகாரிகளின் ஊதியத்தை வங்கிகளின் அளவுருக்களான இருப்புநிலை அறிக்கை, கடன் விதிமுறை மீறல், லாபங்கள் மற்றும் நிர்வாக அறிக்கை ஆகியவற்றுடன் இணைப்பதற்காக ஒரு புதிய விதிமுறைகளை ஏற்படுத்திட பணியாற்றிக் கொண்டிருக்கின்றது.
- பிப்ரவரி 19-ம் அன்று மத்திய அமைச்சரவை முத்தலாக் மீதான அவசரச் சட்டத்திற்கு தனது அனுமதியை அளித்துள்ளது. இது கடந்த ஒரு வருடத்திற்குள்ளாக மூன்றாவது முறையாகும்.
    - இச்சட்டம் இஸ்லாமிய ஆண்களால் அளிக்கப்படும் உடனடி முத்தலாக் முறையை ஒரு தண்டனைக்குரிய குற்றமாக அறிவிக்கின்றது.
- மகாராஷ்டிரா அரசு பிப்ரவரி 19-ம் தேதியை சிவாஜியின் பிறந்த நாளோடு நினைவுபடுத்தி சிவாஜி ஜெயந்தி எனப்படும் மகாராஜா சிவாஜி தினமாக அனுசரிக்கின்றது.
- நடிகை கரீனா கபூர் கான் சுவஸ்த் தடுப்பு மருந்து இந்திய பரப்புரையின் தூதராக நியமிக்கப்பட்டிருக்கின்றார்.
    - இந்த சுவஸ்த் தடுப்பு மருந்து இந்தியப் பரப்புரையானது இந்திய நிறுவனத்தாலும் நெட்வொர்க் 18 அமைப்பாலும் இணைந்து வெளியிடப்பட்டிருக்கின்றது.
- மத்திய உள்துறை அமைச்சகம் அசாம் ரைபிள்ஸ் படையினரை அவர்கள் படைத் தலைமையகத்தை மிசோரம் மாநிலத்தின் தலைநகரமான அய்ஸ்வால் எனும்

பகுதியிலிருந்து ஜோகாவ்சாங் பகுதிக்கு மே மாதம் 31-ம் தேதிக்குள்ளாக மாற்றியமைக்க உத்தரவிட்டுள்ளது.


   - தற்சமயம் அசாம் ரைபிள்ஸ் படையின் தலைமையகமானது அய்ஸ்வால் நகரத்தில் உள்ள கருவூலம் மற்றும் ஜோடின் சதுக்கத்தில் அமைந்திருக்கின்றது.

- இந்தியாவின் டென்னிஸ் வீரரான பிரஜ்னேஷ் குன்னேஸ்வரன் தனது வாழ்நாளின் சிறந்த சாதனையாக ATP தரவரிசையின் சமீபத்திய பட்டியலில் 94-வது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

# தேசியச் செய்திகள்

## அதானி குழுமத்தின்கீழ் 5 விமான நிலைய செயல்பாடு

- அரசால் தனியார் மயமாக்கத்திற்காக முன்மொழியப்பட்ட ஆறு விமான நிலையங்களில் ஐந்தினை அதானி குழுமம் ஏலத்தில் வென்றிருக்கின்றது.
- அதானி குழுமம் அகமதாபாத், திருவனந்தபுரம், லக்னௌ, மங்களூரு மற்றும் ஜெய்ப்பூர் விமான நிலையங்களை ஏலத்தில் வென்றிருக்கின்றது. கவுஹாத்தி விமான நிலையம் பின்னர் செயல்படுத்தப்படும்.
- தனியார்-அரசு பங்களிப்பு மாதிரியில் விமான நிலையங்களை மேலாண்மை செய்வதற்கான இந்நடவடிக்கையானது உலகத் தரத்தில் உட்கட்டமைப்பையும் சேவைகளையும் அளிப்பதற்கான முயற்சியின் ஒரு பகுதியாகும்.




## ஜாலியன் வாலாபாக் படுகொலை மீதான கவிதை

- பஞ்சாபி புதினங்களின் தந்தை என்றும் அறியப்படும் பஞ்சாபிக் கவிஞரான நானக் சிங்கால் 1919, ஏப்ரல் 13-ம் தேதி நிகழ்ந்த ஜாலியன் வாலா பாக் படுகொலை மீதான கவிதை ஒன்று எழுதப்பட்டு வெளியிடப்பட்டது.
- இந்த கவிதை பிரிட்டிஷ் ஆட்சியின் மீதான ஒரு கடுமையான விமர்சனமாகும். அதன் வெளியீட்டிற்குப் பிறகு அது தடை செய்யப்பட்டது. தொடர்ச்சியாக அதன் கையெழுத்துப் பிரதியும் தொலைக்கப்பட்டது.
- 99 வருடங்களுக்குப் பிறகு அந்த ஆசிரியரின் பேரனும் ராஜதந்திரி அதிகாரியுமான

நவ்தீப் சூரியால் அந்த கவிதை மீட்டெடுக்கப்பட்டு ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப் பட்டிருக்கின்றது.

❖ இது ஹார்பர் காலின் இந்திய நிறுவனத்தால் அடுத்த மாதம் நிகழும் ஜாலியன் வாலாபாக் படுகொலையின் நூற்றாண்டு தினத்தை அனுசரிப்பதற்காக பிரசுரிக்கப்படும்.

## நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களுக்கான விதிமுறைகள்

❖ பல்கலைக்கழக மானியக் குழு நிகர்நிலைப் பல்கலைக்கழகத் தகுதியினைக் கோரும் கல்வி நிலையங்களுக்கு புதிய விதிமுறைகளை ஏற்படுத்தியிருக்கின்றது.

❖ இந்த புதிய விதிமுறைகள் ஏற்கெனவே இருக்கும் நிகர்நிலைப் பல்கலைக் கழகங்களுக்கும் தங்கள் தகுதியினை தக்க வைத்துக் கொள்வதற்காக பொருந்தும்.

❖ இதில் முதல் விதிமுறை என்பது கல்வி நிறுவனம் இளங்கலை, முதுகலை மற்றும் ஆராய்ச்சிப் படிப்பு ஆகிய நிலைகளில் படிப்புகளை அளிக்க வேண்டும்.


❖ இரண்டாவதாக, நிகர்நிலைப் பல்கலைக்கழகமாக அறிவிக்க வேண்டி விண்ணப்பிக்கும் ஒரு கல்வி நிறுவனம் குறைந்தது இருபது வருடங்களாவது நடைமுறையில் இருக்க வேண்டும்.

❖ மேலும் அந்நிறுவனம் தொடர்ச்சியாக மூன்று சுழற்சிப் பருவங்களுக்கு குறைந்தது 3.26 ஒட்டுமொத்த தகுதிப் புள்ளிகளின் சராசரியுடன் (CGPA – Cumulative Grade Points Average) தேசிய மதிப்பீட்டு மற்றும் தரச்சான்றுக் குழுவினால் ஒரு தகுந்த அங்கீகாரத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

❖ தொழில்நுட்ப நிறுவனங்களைப் பொறுத்த வரையில் தகுதியுடைய தொழில்நுட்ப பயிற்சிகளில் மூன்றில் இரண்டு பங்கு தேசிய அங்கீகார மன்றத்தால் அங்கீகாரம் அளிக்கப்பட்டிருக்க வேண்டும்.

## டிஜிட்டல் பலகை நடவடிக்கை

❖ மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் பிரகாஷ் ஜாவேத்கர் நாட்டில் கல்விக்கான தரத்தை மேம்படுத்துவதற்காக தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திட டிஜிட்டல் பலகை நடவடிக்கை எனும் திட்டத்தைத் துவக்கி வைத்தார்.




❖ கல்வி கற்பதையும் கற்பித்தலையும் ஊடாடும் விதத்திலும், சுண்டி இழுக்கும் விதத்தில் கல்வி கற்பதை ஒரு வழிகாட்டும் நடைமுறையாக பிரபலப்படுத்துவதிலும் டிஜிட்டல்


பலகை நடவடிக்கை ஒரு புரட்சிகரமான நடவடிக்கையாகும்.

- பள்ளிகளில் சிறந்த டிஜிட்டல் கல்வியை வழங்கிட இத்திட்டம் கரும்பலகை நடவடிக்கை என்ற திட்டத்தின் மாதிரி வடிவில் துவங்கிடப் பட்டிருக்கின்றது.
- உயர்கல்வி நிறுவனங்களில் இத்திட்டத்தை அமல்படுத்தும் நிறுவனமாக பல்கலைக்கழக மானியக்குழு இருக்கும்.
- மாநில அரசின் ஒத்துழைப்புடன் மத்திய அரசானது பள்ளிகளில் இத்திட்டத்தை நிறைவேற்றும்.

# பொருளாதாரச் செய்திகள்

## அதிகப்படியான இடைக்கால நிதி அரசிற்கு மாற்றம்

- அரசிற்கு 28000 கோடி ரூபாய் இடைக்கால பங்காதயத்தை அளித்திட ரிசர்வ் வங்கி மன்றம் ஒப்புதலளித்துள்ளது.
- தொடர்ச்சியாக ரிசர்வ் வங்கி இடைக்கால அதிகப்படியான பங்காதயத்தை அரசிற்கு மாற்றுவது இது இரண்டாவது வருடமாகும்.
- ரிசர்வ் வங்கியின் நிதியாண்டு ஜூலை மாதம் முடிவடைகின்றது. இடைக்கால பங்காதயம் பொதுவாக மார்ச் மாதத்திற்குள்ளாக அரசிற்கு அளிக்கப்படும்.




- அரசு 40000 கோடி ரூபாயை இடைக்கால பங்காதயமாக கேட்டுக் கொண்டிருந்தது. ஆனால் மத்திய வங்கியின் தணிக்கைக் குழு ரிசர்வ் வங்கியின் கொள்கைகள் மற்றும் தேவைகள் ஆகியவற்றைக் கணக்கில் கொண்டதன் பிறகு 28000 கோடி ரூபாய்க்கு ஒப்புதலளித்து இருக்கின்றது.
- அரசு ஏற்கெனவே 2018-19 நிதியாண்டில் மத்திய வங்கியிடமிருந்து 40000 கோடி ரூபாயைப் பெற்றிருக்கின்றது.

# மாநிலச் செய்திகள்

## மல்லகம்ப் உலக சாம்பியன்ஷிப்

- மத்திய மும்பையில் உள்ள சிவாஜிப் பூங்காவில் இரண்டு நாட்கள் நடைபெறும் முதலாவது மல்லகம்ப் உலக சாம்பியன்ஷிப் போட்டி நடத்தப்பட்டது.

- இது ஏறக்குறைய 15 நாடுகளிலிருந்து பங்கேற்பாளர்கள் பங்கு பெற்றதைக் கண்டிருக்கின்றது.



- சாம்பியன்ஷிப்பிற்கான அணியாக இந்தியா வெற்றி பெற்ற நிலையில் சிங்கப்பூர் இரண்டாவதாகவும் மலேசியா மூன்றாவதாகவும் இடம் பிடித்தன.

# விளையாட்டுச் செய்திகள்

## ஸ்ட்ராண்ட்ஜா நினைவு சுற்றுப் பயணப் போட்டி

- பல்கேரியாவின் சோபியா நகரத்தில் நடைபெற்ற ஸ்ட்ராண்ட்ஜா நினைவு சுற்றுப்பயணப் போட்டியில் தொடர்ச்சியான இரண்டாவது தங்கத்தை ஆசியப் போட்டிகளின் தங்கப் பதக்க வீரரான அமித் பங்கால் (49 கிலோ பிரிவு) வென்றுள்ளார்.
- நிகாத் ஜரீன் மற்றும் மீனா குமாரி தேவி இந்தப் போட்டியில் முதல் இந்தியப் பெண்கள் குத்துச் சண்டை வீராங்கனைகளாக தங்கப் பதக்கங்களை வென்றுள்ளனர்.




- பிலிப்பினோ ஜோசி காபுகோவுடன் அடைந்த தோல்விக்குப் பிறகு மஞ்சு ராணி (48 கிலோ கிராம்) வெள்ளிப் பதக்கத்தோடு நிலை பெற்றார்.
- விலாவோ பாசுமத்தாரி (64 கிலோ கிராம்), நீரஜ் (1600 கிலோ கிராம்) லவ்லினா

போர்கோஹைன் (69 கிலோ கிராம்) ஆகியோர் அரையிறுதிப் போட்டியில் தோல்வியடைந்த பிறகு வெண்கலப் பதக்கங்களுடன் நிலை பெற்றனர்.

- இந்த குத்துச் சண்டைப் போட்டியின் 70-வது பதிப்பில் இந்தியா மூன்று தங்கம், ஒரு வெள்ளி மற்றும் மூன்று வெண்கலப் பதக்கங்களுடன் போட்டியை நிறைவு செய்தது.

# முக்கிய தினங்கள்

## மத்திய கலால் (உற்பத்தி) வரி தினம் 2019 – பிப்ரவரி 24

- மத்திய கலால் (உற்பத்தி) வரி தினமானது ஒவ்வொரு வருடமும் பிப்ரவரி 24-ம் தேதி இந்தியா முழுவதும் சிறப்பான முறையில் கலால் வரித் துறையின் ஊழியர்களை கலால் வரி விதிப்பை மேற்கொள்ள ஊக்குவிப்பதற்காக நாடு முழுவதும் அனுசரிக்கப்படுகிறது.
- இது மத்திய கலால் வரி மற்றும் சுங்க வரித்துறை அதிகாரிகளிடையே சமத்துவத்தையும், அவர்கள் சிறந்த வரி கண்காணிப்பினை மேற்கொள்வதை உறுதி செய்வதையும் ஊக்குவிக்கின்றது.
- இது 1944 ஆம் வருடம் பிப்ரவரி 24-ம் தேதி மத்திய கலால் மற்றும் உப்பு சட்டம் ஏற்படுத்தப்பட்டதை அனுசரிக்க கொண்டாடப்படுகின்றது.

## உலக அரசு சாராக் குழு தினம் – பிப்ரவரி 27

- உலக அரசு சாராக் குழு (NGO) தினம் ஒவ்வொரு வருடமும் பிப்ரவரி 27-ம் தேதி அனுசரிக்கப்படுகின்ற ஒரு சர்வதேச ஆண்டுக் குறிப்பேட்டு தினமாகும்.



- இது 2010 ஆம் ஆண்டில் பால்டிக் கடற்பிரதேச நாடுகளின் குழுவினுடைய 9-வது பால்டிக் கடல் என்ஜிஓ மன்றத்தின் 12 உறுப்பினர் நாடுகளால் அலுவல்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டு அறிவிக்கப்பட்டது.
- முதல் முறையாக இத்தினம் ஐக்கிய நாடுகள் சபை, ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளால் 2014-ம் ஆண்டு அனுசரிக்கப்பட்டது.
- உலக அரசு சாராக் குழுக்களின் தினத்தினுடைய உலகளாவிய கருத்துருவானது உலகெங்கிலும் உள்ள பல்வேறு அரசு சாராக் குழுக்களையும் அதன் பின்னால் இருக்கும் மக்களையும் "கொண்டாடச் செய்தல், அனுசரித்தல் மற்றும் ஒருங்கிணையச் செய்தல்" என்பதாகும்.

\- - - - - - - - - - - - - - -